# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 176 | செவ்வாய்க்கிழமை Tuesday | 22.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## டெங்கு காய்ச்சல் பரவல்:

# தமிழகம் முழுவதும் மருத்துமனைகளின் தயார் நிலையை உறுதி செய்ய வேண்டும்



## முதலமைச்சர் விஜய் உத்தரவு

சென்னை: டெங்கு காய்ச்சலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது, தீவிர டெங்கு நோயாளிகளுக்கான சிகிச்சை, தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கு அரசு மருத்துவமனைகள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: முதல்வர் விஜய் தலைமையில் இன்று (21.9.2026) தலைமைச் செயலகத்தில், வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு கடலோர மற்றும் டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், தமிழகம் முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவலை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு கடலோர மற்றும் டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழக முதல்வர் அறிவுறுத்தல்களை வழங்கினார். கடல் நீர் உட்புகுதல், கடல் அரிப்பு மற்றும் வெள்ளப் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட வேண்டுமென்றும், பாதிப்புக்குள்ளாகக்கூடிய கடலோரக் கிராமங்கள் மற்றும் அங்கு வசிக்கும் மக்களின் விவரங்கள் தயாராக இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார். மேலும், மீனவர்களுக்கு வானிலை மற்றும் கடல் எச்சரிக்கைகள் உரிய நேரத்தில் சென்றடைவதையும், வெள்ளப் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவதற்கான திட்டத்தையும், புயல் பாதுகாப்பு மையங்கள் மற்றும் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் பயன்பாட்டிற்குத் தயாராக இருப்பதையும் உறுதி செய்திட வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தினார். அத்துடன், பள்ளிகள், சமுதாயக் கூடங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் தேவைக்கேற்ப நிவாரண முகாம்களாக பயன்படுத்தும் வகையில் தயார் நிலையில் இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென்றும், நிவாரண முகாம்களில் குடிநீர், உணவு, மின்சாரம், கழிப்பறைமற்றும்மருத்துவ வசதிகள் தயார் நிலையில் இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சியர்களுக்குதமிழக முதல்வர் அறிவுறுத்தினார்.

மேலும், அவசரகால மீட்புப் பணிகளின்போது, மாவட்ட அளவில் அவசரகால மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் இருப்பதையும், படகுகள், உயிர்காக்கும் மிதவைகள், கயிறுகள், மின்உற்பத்தி இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் போன்றவையும் தயார் நிலையில் இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். அத்துடன், பொதுமக்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் பிற எச்சரிக்கை வழிமுறைகள் மூலம் தகவல் வழங்கப்படுவதையும், செயற்கைக்கோள் தொலைபேசி (Satellite phone) உள்ளிட்ட அவசரகால தகவல் தொடர்பு சாதனங்கள் செயல்படும் நிலையில் தயாராக உள்ளதா என்பதையும் உறுதிசெய்திட வேண்டுமென்றும், சேமிப்புக் கிடங்குகளில் இருப்பில் வைத்திருக்கும் நெல் மூட்டைகள் மழைநீரால் பாதிக்கப்படாமல் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்திட வேண்டுமென்றும் தமிழக முதல்வர்தெரிவித்தார்.

மேலும், சாலைகள், மழைநீர் வடிகால்கள், பாலங்கள் ஆகியவற்றை ட்ரோன் மூலமாக ஆய்வு செய்து, பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், பருவமழைக் காலங்களில் நோய்த் தொற்று பரவாமல் இருக்க பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறும், கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மேலும், இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, எல்நினோஎனும்காலநிலை மாற்ற நிகழ்வு, பேரிடர் மேலாண்மைக்கான நிபுணர் ஆலோசனைக் குழுவின் முதற்கட்ட ஆய்வறிக்கையினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் முதல்வரிடம் வழங்கினார். டெங்கு பரவல் தடுப்பு நடவடிக்கைகள்:

டெங்கு காய்ச்சல் நிலவரம் குறித்து மாநில அளவில் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாவட்டவாரியாக டெங்கு மற்றும் காய்ச்சல் நோயாளிகளின் எண்ணிக்கை, நோய் அதிகரித்து வரும் பகுதிகள், கொசு உற்பத்தியாகும் இடங்கள் முதலியவற்றைக் கண்டறிந்து கொசுப்புழு மற்றும் முதிர் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் புகை மருந்து அடிக்கும் உபகரணங்களின் இருப்பு ஆகியவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

கொசுப்புழு ஒழிப்புப் (DBC) பணியாளர்கள் மூலம் வீடுதோறும் களஆய்வு செய்து, ஏடீஸ் கொசு உற்பத்தியாகும் இடங்களைக் கண்டறிதல் மற்றும் அகற்றுதல், கொசுப்புழு ஒழிப்பு, பொதுமக்கள் விழிப்புணர்வு மற்றும் அதிக ஆபத்துள்ள பகுதிகளில் தொடர் கண்காணிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், பொதுமக்களிடையே டெங்கு காய்ச்சலுக்கு உடனடியாக மருத்துவ ஆலோசனைப் பெறவும், கொசு உற்பத்தியைத் தடுக்கும் முறைகளைப் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்த விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் முதல்வர் விஜய் அறிவுறுத்தினார். டெங்கு காய்ச்சலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதோடு, தேவையான ஆய்வகப் பரிசோதனைகள், நோயாளியின் மருத்துவ மதிப்பீடு, எச்சரிக்கை அறிகுறிகளைக் கண்டறிதல், உரிய நேரத்தில் சிகிச்சைக்குப் பரிந்துரைசெய்தல், திரவ சிகிச்சை வசதிகள், தீவிர டெங்கு நோயாளிகளுக்கான சிகிச்சை, தொடர் மருத்துவக் கண்காணிப்பு உள்ளிட்டவற்றை மேற்கொள்வதற்கு அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் முதல்வர் உத்தரவிட்டார்.

# மீனவர்களின் இடத்தில் தலைமைச் செயலகம்: யாருடைய ஆசைக்காக கட்டப்படுகிறது? தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி



சென்னை: "கடற்கரையைப் பார்த்தபடி முதல்வரின் அலுவலகம் அமைய வேண்டும் என ஜோதிடர்ஒருவர்சொன்னதாலேயே முதல்வர் பட்டினப்பாக்கத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஒருவரின் ஆசைக்காக ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது." என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மீனவர்களின் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் அழிக்கும் வகையில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் தவெக அரசின் தன்னிச்சையான முடிவு கடும் கண்டனத்துக்குரியது. இந்த விவகாரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைக் கோரி, மீனவச் சங்கத்தினர் என்னை அண்ணா அறிவாலயத்தில் சந்தித்தனர்.

இதற்கு எதிராக மீனவ மக்கள் நடத்தி வரும் போராட்டங்களுக்கு திமுக முழு ஆதரவைத் தருவதோடு, தனது முடிவில் இருந்து தவெக அரசு பின்வாங்கும் வரை மீனவச் சகோதரர்களுடன் உறுதியாகத் துணைநிற்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைமைச் செயலகம் கட்ட எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே, தலைமைச் செயலகப் பயன்பாட்டுக்கெனக் கட்டப்பட்ட ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகமும் இருக்கிறது. வேண்டுமென்றால், அங்கே செயல்பட்டு வரும் மருத்துவமனையை வேறு இடத்துக்கு மாற்றிவிட்டு, மீண்டும் அதைத் தலைமைச் செயலகமாகப் பயன்படுத்தலாம்.

ஆனால், கடற்கரையைப் பார்த்தபடி முதல்வரின் அலுவலகம் அமைய வேண்டும் என ஜோதிடர்ஒருவர்சொன்னதாலேயே முதல்வர் பட்டினப்பாக்கத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

ஒருவரின் ஆசைக்காக ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும்,தமிழ்நாடு அரசு தற்போது தேர்ந்தெடுத்துள்ள இடத்தைச் சுற்றி ஏராளமான பள்ளிகள் அமைந்துள்ளன. இது கடுமையான போக்குவரத்து நெரிசல் கொண்ட பகுதியாகும். இங்கு தலைமைச் செயலகம் அமைந்தால் மாணவர்களும் பொதுமக்களும் கடும் அவதிக்குள்ளாக நேரிடும்.

மேலும், பட்டினப்பாக்கத்தில் புதிதாகத் தலைமைச் செயலகம் கட்டவுள்ள பகுதிக்குத் தெற்கில் முள்ளிக்குப்பம், சீனிவாசபுரம் ஆகிய மீனவ கிராமங்கள் உள்ளன. வடக்குப் பகுதியில் ராஜீவ் காந்தி நகர், பவானி குப்பம், இருதயபுரம், செல்வராஜ்புரம், டூமில் குப்பம், நொச்சி நகர், நொச்சிக்குப்பம் என மொத்தம் 12 குடியிருப்புப் பகுதிகள் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீட்டருக்குள்ளாகவே உள்ளன. முள்ளிக்குப்பம் பஞ்சாயத்து மற்றும் மீனவ மக்கள் அரசுக்கு அனுப்பி உள்ள கடிதத்துக்குஉரிய மரியாதை அளிக்க வேண்டும்.

அரசாணை வெளியிட்ட பின்னர் முடிவெடுக்கவில்லை எனச் சொல்லும் அளவுக்குத்தான் இவர்களின் நிர்வாக அறிவு இருக்கிறதா? அல்லது, வாக்களித்த மக்களும் எதிர்க்கட்சிகளும் இவர்கள் எந்தப் பொய்யைச் சொன்னாலும் நம்புவார்கள் என நினைக்கிறார்களா?


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


## காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்தது; 21 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்து இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறி இருப்பதாவது:-

21 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

வடக்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய மத்திய-கிழக்கு வங்கக்கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதியானது, மத்திய மற்றும் அதனையொட்டிய மேற்கு வங்கக் கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுவடைந்துள்ளது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவலுவடையும். அது நாளை (22-ந்தேதி) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெறக்கூடும்.வருகிற 23-ந்தேதி காலை அது வடக்கு ஆந்திரா தெற்கு ஒடிசா கடற்கரை பகுதியை நெருங்கும்.

இதன் காரணமாக தமிழகத்தில் 21 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளது. நீலகிரி, கோவை,தர்மபுரி,கிருஷ்ணகிரி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை,பெரம்பலூர்,அரியலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, சிவகங்கை, தஞ்சாவூர், மதுரை, கடலூர், திருப்பத்தூர், வேலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையில் அடுத்த 2 நாட்களுக்கு இடி,மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக கடல் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால், மத்திய மற்றும் அதனை ஒட்டிய தெற்கு வங்கக்கடல் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் இன்றும் நாளையும் மீன்பிடிக்க செல்ல வேண்டாம். இப்பகுதிகளில் மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும், சில நேரங்களில் 65 கிலோ மீட்டர் வேகம் வரையிலும் சூறாவளி காற்று வீசக்கூடும். சென்னை பாலவாக்கம் முதல் லட்சுமிபுரம் ஓடைக்குப்பம் வரையிலான கடற்கரை பகுதிகளில் நீரோட்டத்தின் வேகம்அதிகமாகஇருக்கும் என்பதால், நாளை இரவு வரை எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

# மதுராந்தகம் இடைத்தேர்தல்: டீக்கடையில் டீ போட்டு வாக்கு சேகரித்த தவெக வேட்பாளர் மரகதம் குமரவேல்



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தமிழக வெற்றிகழகத்தின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள மரகதம் குமரவேல், தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக மதுராந்தகம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இன்று பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரித்தார். அப்போது அங்குள்ள டீக்கடை ஒன்றில் சென்ற மரகதம் குமரவேல், பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன், டீ போட்டு கொடுத்து வித்தியாசமான முறையில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

டீக்கடையில் பொதுமக்களுடன் இணைந்து டீ தயாரித்த அவர், அவர்களிடம் தொகுதியின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து, தமிழக வெற்றி கழகத்திற்கு ஆதரவளிக்குமாறு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

டீக்கடையில் வேட்பாளர் டீ போட்டு கொடுத்து வாக்கு சேகரித்த சம்பவம் அப்பகுதியில் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. மரகதம் குமரவேலின் இந்த வித்தியாசமான பிரசார நடவடிக்கையை அங்கிருந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

# அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவின் பேச்சுக்கு மதுராந்தகம் திமுக வேட்பாளர் பரந்தாமன் கண்டனம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்கரணை பகுதியில் திமுக வேட்பாளர் பரந்தாமன் செய்தியாளர்களை சந்தித்தார். நேற்று முன்தினம் தமிழக வெற்றிக்கழகத்தின் பாக் முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் பேசிய ஆதவ் அர்ஜூனா திமுகவை கடுமையாக விமர்சித்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் திமுக வேட்பாளர் பரந்தாமன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், ஆட்சிக்கு வந்து நான்கு மாதம் ஆகிறது ஆனால் 4 நிமிடம் கூட தன்னுடைய ஆட்சியின் சாதனை வாக்கு கேட்க முடியவில்லை, திமுகவையும் திமுக தலைவரையும் எதிர்க்கட்சி தலைவரையும் திமுக சார்பாக தேர்தல் பணி ஆற்ற வந்துள்ள முன்னாள் அமைச்சர்களை பற்றி ஒப்பாரி வைத்துள்ளார்

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா தன்னுடைய சொந்த செல்வாக்கையோ, தங்களுடைய ஆட்சியை திட்டங்களை பற்றி சொல்வதற்கு எதுவும் இல்லை, காலி குடம் மதுராந்தகத்தில் சட்டம் போட்டுவிட்டு சென்றுள்ளது. கலைஞரின் பேரன் என உதயநிதிக்கு வரலாறு உள்ளது. ஆனால் ஆதவ் அர்ஜூனாவிற்கு என்ன உள்ளது. ஓட்டுக்கு பணம் கொடுப்பதாக திமுக காரனை பற்றி பொய் பிரச்சாரம் செய்ய வந்துள்ளீர்களே இதை சொல்வதற்கு ஆதவ் அர்ஜூனாவிற்கு தார்மீகம் உள்ளதா? எம்எல்ஏவை கோடிகணக்காணரூபாய் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய உங்களுக்கு என்ன தகுதி உள்ளது?

ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதாண்டாவளர்ச்சி என பட்டுக்கோட்டையார் கூறியுள்ளார். மாதவ அர்ஜூனாவிற்கு அறிவு வளர்ந்துள்ளதா என்பதை பற்றிநான்கூறவேண்டியது இல்லை, தமிழகமக்களுக்கும்மதுராந்தகம்மக்களுக்கும் நன்றாக தெரியும். தேர்தல் பணியாற்ற வந்துள்ள தவெகவினர் உங்களுடைய சாதனைகளை சொல்லி வாக்கு கேட்க வேண்டும்.

உதயநிதி கைது பண்ணுவதற்கு அவர் பெரிய ஆள் இல்லை எனக் கூறினீர்களே? இது கைதுக்கான ரிப்போர்ட். கைது செய்யும் போது நான் உடனிருந்தேன். மதுராந்தகத்தில் வந்து உட்கார்ந்து விட்டு பொய்யாக பேசினால் அனைவரும் உங்களுக்கு ஓட்டு போடுவார்கள் என கனவு காணக் கூடாது. தொகுதியில் எங்குசென்றாலும், மின்வெட்டு பிரச்சனை, மின்சார விலை உயர்வு, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வை பற்றி பொதுமக்கள் கூறுகிறார்கள். தேவையில்லாமல் திமுகவினரை சீண்டினால் நான் தெருக்கு தெரு மேடை போட்டு பேசுவேன். வேதாளத்திற்கு முருங்கை மரத்தைப் பற்றி தான் நியாபகம் இருக்கும், திமுகவிற்கு ஆலமரத்தை பற்றி தான் எண்ணம் இருக்கும். 75 வருட கட்சியை பேக் செய்து விட்டேன் என கூறுகிறார்களே, ஆனால் மதுராந்தகம் தொகுதியில் போட்டியிட அவர்களுக்கு வேட்பாளரை இல்லையே ஏன்? அதிமுகவேட்பாளரைவாங்கி தமிழக வெற்றி கழக வேட்பாளராக நிறுத்தியுள்ளனர். ஆள் இல்லாத கடைக்கு டீ ஆத்துகிறார் ஆதவ் அர்ஜூனா என விமர்சனம் செய்தார். என்னுடைய வெற்றி தமிழகத்தில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் என திமுக வேட்பாளர் பரந்தாமன் பேட்டி அளித்தார்.

# தேசிய அளவிலான சிறிய ரக ரேஸ் கார் பந்தயம் ஈ.ஏ.எஸ்.ஏ. என்ஜினீயரிங் கல்லூரி மாணவர்கள் இரண்டாமிடம்



என்ஜினீயரிங் கல்லூரிகள் மற்றும் என்ஜினீயரிங் சார்ந்த துறைகளிடையே, சிறிய ரக ரேஸ் கார்களுக்கு இடையிலான பந்தயம் தற்போது பிரபலமடைந்து வருகிறது. மெக்கானிக்கல் என்ஜினீயரிங் மாணவர்கள் இந்தவகை ரேஸ் கார் பந்தயங்களில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த சிறிய ரக ரேஸ் கார்கள், ரேஸ் கார்களைப் போலவே இயங்கக் கூடியது. என்ஜின் பொறுத்தப்பட்டு, நிட்ரோ எத்தனால் எரிபொருளில் இயங்கக் கூடியவை. 3.5 சி.சி., திறன் கொண்டது. இவை கார் பந்தயங்களுக்குப் பயன்படுத்துவதைப் போன்றே பந்தய ஓடுதளங்களில், ரிமோட்டின் உதவியுடன் இயக்கப்பட்டு முந்தி வரும் கார்கள் முதல் மூன்று பரிசுகளுக்குத் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

இதன்படி ஈரோடு வெள்ளாளர் என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின், மெக்கானிக்கல் என்ஜினீயரிங் துறை சார்பில், மெக்கானிக்கல் என்ஜினீயர்ஸ் அசோசியேசன், எஸ்.ஏ.இ., இன்டியா கிளப் நடத்திய "ரெவோரா-26" நிட்ரோ ஆர்.சி. ரேஸிங் என்ற தேசிய அளவிலான சிறிய ரகரேஸ் கார் பந்தயம், அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் 20 என்ஜினீயரிங் கல்லூரிகள் மற்றும் சிறிய ரககார் பந்தய கிளப்புகளைச் சேர்ந்த 30 அணிகள் கலந்து கொண்டன. இப்போட்டியில் கோவை நவக்கரையில் ஈ.ஏ.எஸ்.ஏ., என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டாமாண்டு பி.இ., மெக்கானிக்கல் என்ஜினீயரிங் படிக்கும் டீம் எபெக்ஸ் கிளப் மாணவர்கள் ரோஹித், சூர்யா, ராஜகணபதி, அபிலாஷ், தானேஸ்வரன், ரெனிசன் ஆகியோர் அடங்கிய அணியினர் இரண்டாமிடம் பிடித்து, பரிசுக் கோப்பை மற்றும் ரூ.7 ஆயிரம் ரொக்கப்பரிசு வென்றனர்.

ஈ.ஏ.எஸ்.ஏ., என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரிதலைவர் டி.ஈ.சுஜாதா, செயலாளர் டி.ஈ. அஜித், தாளாளர் டி.ஈ. ஆதர்ஷ் பாராட்டினார். இதேபோல் முதல்வர் இசட். ராபர்ட் கென்னடி, துறைத்தலைவர் ராஜேஷ் ரூபன் மற்றும் பேராசிரியர்கள் மாணவர்களைப் பாராட்டினர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



2026 தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு பட்டாசு விற்பனை செய்ய தற்காலிகபட்டாசுஉரிமம்கோரிவிண்ணப்பிக்கவிரும்பும்சிறுவணிகர்களின் நலன் கருதி தீபாவளி பண்டிகைக்கு முன்னதாகவே அவர்களது வியாபாரத்தை துவங்குவதற்கு ஏதுவாக இணையதளம் மூலமாக விண்ணப்பம் செய்யவும் உரிமங்களை பெற்றுக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை பொது இ-சேவை மையங்களில் பட்டாசு உரிமம் கோரும் இடத்தின் புல வரைபடம், கிரையப்பத்திரம், முகவரிக்கான ஆதாரம் (ஆதார் அட்டை/குடும்ப அட்டை), சொத்துவரி செலுத்தியதற்கான ரசீது, கடவுச் சீட்டு அளவு புகைப்படம் மற்றும் 0070-60-103AA-22799 என்ற கணக்கு தலைப்பில் சேவைக்கட்டணமாகரூ.600/-(ரூபாய்அறுநூறுமட்டும்)செலுத்தியதற்கான ரசீது ஆகிய ஆவணங்களுடன் எதிர்வரும் 18.10.2026 வரை விண்ணப்பம் செய்யலாம். இக்குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப்பின் அதாவது 18.10.2026-க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் ஏற்கப்பட்டதெனில் தற்காலிக உரிமத்தையும், நிராகரிக்கப்பட்டதெனில் அதற்கான ஆணையையும் மனுதாரர்கள் இணையதளம்மூலமாகவே பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.



## மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில்

# அச்சிறுப்பாக்கத்தில் முதலமைச்சர் விஜய் பிரச்சாரம் மேற்கொள்ளும் பொதுக்கூட்ட மேடை தயார் செய்யும் பணிகள் தீவிரம்

## சுமார் 5 ஆயிரம் பேர் மட்டும் அனுமதி

செங்கல்பட்டு மாவட்டம்மதுராந்தகம்தொகுதி இடைத்தேர்தலில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்மரகதம்குமரவேல் தனது தொகுதிக்குட்பட்டபல்வேறு இடங்களில் ஆறாவது திறந்த வெளி வாகனத்தில் சென்று தீவிர வாக்கு சேகரத்தில் ஈடுபட்டு வருகிறார்

இந்த நிலையில் மரகதம் குமரவேலை ஆதரித்து தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் 2 நாட்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட திட்டமிடப்பட்டுள்ளது

வரும் 25ஆ ம் தேதி மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் பகுதியில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று மரகதம் குமரவேலுக்கு ஆதரவாக விசில் சின்னத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட உள்ள நிலையில் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை அச்சரப்பாக்கம் வஜ்ரகிரி மலை அடிவாரத்தில் அதற்கான மேடை அமைக்கும் பணி பந்தக்கால் நடப்பட்டு தற்போது முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது

இந்த பொதுக்கூட்டத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் வரை மட்டுமே அனுமதி வழங்கப்பட உள்ளதாக காவல்துறை தரப்பில் கூறப்படும் நிலையில் அதற்காக பிரத்தியேக டிஜிட்டல் மேடை மற்றும் கூடாரம் அமைக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது

மேலும் பொதுக்கூட்டத்திற்கு வரும் பொதுமக்கள் கொண்டு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு வாகன நிறுத்தமிடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பணிகள் நடைபெற்று வரும் இடத்தில் காவல்துறையினரும் தற்பொழுது ஆய்வு செய்து வருகின்றனர்

# கோவையில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு!



கோவை நீலம்பூரில் உள்ள கதிர் பொறியியல் கல்லூரியில் 'நோ டிரக்ஸ் - சேவ் லைஃப்' என்ற விழிப்புணர்வு கருத்தை மையமாகக் கொண்டு 'ராயல் எவரா - தமிழ்நாடு ஸ்டேட் லெவல் பியூட்டி பேஜண்ட் 2026' நிகழ்ச்சி நடைபெற்றது.

முத்தமிழ் ஈவன்ட்ஸ் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 120-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக, கேரளாவைச் சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகள், நோ ட்ரக்ஸ் சேவ் லைப் என்ற வாசகம் பொருந்திய பதாகைகளை கைகளில் ஏந்தியபடி மேடையில் ரேம்ப் வால்க் செய்தனர். தன்னம்பிக்கையுடன் அவர்கள் ஒய்யாரமாக நடைபோட்ட காட்சி பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்ததுடன், அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இதில் டினி ஸ்டார், லிட்டில் ஸ்டார், டீன் ஐகான், மிஸ், மற்றும் மிஸ்டர் அன்ட் மிஸஸ் என பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பட்டங்கள், பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் சூலூர் சட்டமன்ற உறுப்பினர் சுகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சுகுமார் கூறியதாவது. சிறப்பு குழந்தைகளுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் 4 முதல் 5 சிறப்புப் பள்ளிகள் அல்லது தேவையான சிறப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முதலமைச்சர் ஜோசப் விஜய் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் ஆகியோரிடம் எடுத்துரைப்பதாக தெரிவித்தார்.

போதைப்பொருள் இல்லாத சமூகத்திற்கான விழிப்புண ர்வையும், சிறப்பு குழந்தைகளின் திறமை மற்றும் தன்னம்பிக்கையையும் ஒரே மேடையில் வெளிப்படுத்திய இந்த நிகழ்ச்சி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது.

# கோவையில் கேஎம்சிஹெச் மருத்துவமனையில் தொற்றா நோய்களின் தாக்கம் குறித்த விழா



கேஎம்சிஎச் மருத்துவமனையின் ஆராய்ச்சி மையம் சார்பில் கிராமப்புறம், சிற்றூர் மற்றும் நகர்ப்புற மக்களிடம் தொற்றா நோய்களின் தாக்கம் குறித்து கடந்த 2015 முதல் 2026 வரை ஆய்வு நடத்தப்பட்டதின் முடிவுகளை வெளியிட்ட கேஎம்சிஹெச் மருத்துவமனை நிர்வாகத்தினர்

கேஎம்சிஎச் மருத்துவமனையின் ஆராய்ச்சி மையம் சார்பில் கிராமப்புறம், சிற்றூர் மற்றும் நகர்ப்புற மக்களிடம் தொற்றா நோய்களின் தாக்கம் குறித்து கடந்த 2015 முதல் 2026 வரை ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு முடிவுகளை பகிர்ந்துகொள்ளவும், சர்வதேச அளவில் மருத்துவ ஒத்துழைப்பை மேம்படுத்தவும் கிராமப்புற பொது சுகாதாரம் மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பான 3-வது சர்வதேச மாநாடு கோவை காளப்பட்டியில் உள்ள டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரியில் கடந்த இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்த மாநாட்டை கேஎம்சிஎச் மருத்துவமனை தலைவர் டாக்டர் நல்லா ஜி பழனிசாமி தொடங்கி வைத்து, ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டார். இதில் மருத்துவமனையின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி, மருத்துவமனையின் கல்லீரல் நோய் நிபுணர் டாக்டர் அருள்ராஜ் ராமகிருஷ்ணன், இருதய நிபுணர் டாக்டர் பிரபாகரன் துரைராஜ் மற்றும் இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, கனடா மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து பொது சுகாதார நிபுணர்கள், சுகாதார கொள்கை வகுப்பாளர்கள், மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வகையில் டாக்டர் தவமணி தேவி பழனிசாமி பெயரிலான இளம் ஆய்வாளர் விருதும் வழங்கப்பட்டது.

இது குறித்து டாக்டர் நல்லா ஜி பழனிசாமி கூறியதாவது:

கேஎம்சிஎச் ஆராய்ச்சி மையத்தின் மூலம் கோவை தடாகம், காளப்பட்டி, ஈரோடு நல்லாம்பட்டி ஆகிய 3 இடங்களில் தொற்றா நோய்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் மூலம், மக்களிடையே உடல் பருமன் பாதிப்பு 43.1 சதவீதத்திலிருந்து 57.0 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதில், பெண்களிடையே 63.3 சதவீதமும், 20 முதல் 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே 61.4 சதவீதமும் உடல் பருமன் தாக்கம் மிக அதிகமாக உள்ளது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட நபர்களைத் தொடர்ந்து கண்காணித்ததில், ஆரோக்கியமாக இருந்த 3 நபர்களில் ஒருவருக்கு ரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளது. அதேபோல், சர்க்கரை அளவு சாதாரணமாக இருந்தவர்களில் 56.2 சதவீதம் பேருக்கு நீரிழிவு அல்லது நீரிழிவுக்கு முந்தைய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆரோக்கியமான உடல் எடையுடன் இருந்த மூன்று நபர்களில் ஒருவருக்கு உடல் எடை அதிகரித்துள்ளது. உடல் பருமன், ரத்த அழுத்தம், சர்க்கரை அளவு மற்றும் கொழுப்புச்சத்து ஏற்றத்தாழ்வு ஆகியவை ஒன்று சேரும் போது எவ்வித வெளிப்படையான அறிகுறிகளும் இன்றியே ரத்த நாளங்கள் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக அறிகுறிகள் ஏதுமின்றியே ஐந்து நபர்களில் ஒருவருக்கு தமனிகளில் ஆரம்பக்கட்ட அடைப்பும், பாதிப்பும் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், நான்கு நபர்களில் ஒருவருக்கு ரத்த சோகை பாதிப்பு இருப்பதும் தெரியவந்துள்ளது. நாட்டில் எந்த வகையான நோய்கள் எவ்வளவு பேருக்கு இருக்கின்றன என்பதை துல்லியமாக அறியவும், அரசு சுகாதார கொள்கைகளை வகுப்பதற்கும் இந்த ஆய்வு முடிவுகள் பெரிதும் பயன்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கோவை மாவட்டம் பேரூர் பகுதியில் உள்ள தமிழ் கல்லூரியில் நடைபெற்ற சிலம்ப தகுதி தேர்வு



உலகசிலம்பம்விளையாட்டு சங்கம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் சிலம்ப பட்டய படிப்புக்கானசெயல்முறைதேர்வு கோவை, பேரூர் பகுதியில், உள்ள தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை மற்றும் அறிவியல் தமிழ் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த போட்டிகளில் கலந்து கொள்ள 59 பேர் கோவை மேற்கு மண்டல பகுதிகளான, கோவை, திருப்பூர்,ஈரோடு,சேலம், தர்மபுரி, நீலகிரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கலந்து கொண்டனர். இந்த தேர்வு முறைகளானது தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.தமிழகத்தில் மொத்தமாக இதுவரை, 432 பேர் விண்ணப்பித்து, தேர்வு எழுதி உள்ள நிலையில், இதன் இறுதி தேர்வுகள் கோவையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடுதிறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் கார்த்திக்கேயன் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு தேர்வுகளை நடத்தினார்

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய உலக சிலம்ப விளையாட்டு சங்க நிறுவன தலைவர் சுதாகரன் கூறியதாவது.. தமிழக அரசு விளையாட்டு துறைகளின் மீது தற்போது நல்ல வழிமுறைகளை பற்றி வருகின்றது.இதனால் ஒவ்வொரு விளையாட்டு துறைக்கும் அங்கீகரிக்கப்பட்ட கலைஞர்களுக்கு நல்ல மரியாதையும் மதிப்பும் உருவாகி வருகின்றது. மேலும் அரசு தமிழகம் முழுவதும் பல்வேறு விளையாட்டு போட்டிகளை ஊக்குவிக்கும் வகையில், விளையாட்டு திருவிழாக்களையும் தமிழக முதல்வர் கோப்பைகள் என்ற பெயரில் நடத்தி, திறமையுள்ளவர்களை அடையாளம் கண்டு வருகின்றது.இந்த நிலையில் சிலம்ப கலையில் உள்ள ஆசான்களையும் ஊக்குவிக்கும் வகையில் இத்தகைய தனி தேர்வுகள் நடத்த பட்டு வருகிறது. இத்தகைய தேர்வுகளில் வெற்றி பெறும் சிலம்ப ஆசான்களை,அரசு தமிழக அரசு பள்ளிகளில் சிலம்பம் கற்று தரும் ஆசிரியர்களாக பணியமர்த்த வேண்டும் என்றும் தெரிவித்தார் இங்கு நடைபெறும் போட்டிகளில்,சிலம்ப கலைகளில் உள்ள, ஒற்றை சிலம்பம், இரட்டை சிலம்பம்,வாள் வீச்சு,என பல்வேறு பிரிவுகளில் வீரர்களுக்கு தேர்வுகள் நடத்த பட உள்ளத். இந்த தேர்வில் வெற்றி பெறும் வீரர்களுக்கு உரிய சான்றிதழ்களை வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார். இந்த சிலம்ப நிகழ்ச்சியில், உலக சிலம்ப விளையாட்டு சங்க தொழில்நுட்ப இயக்குநர் டாக்டர் சின்னசாமி,

மாநில மகளிரணி செயலாளர்விஜூமஹாலட்சுமி, உலக சிலம்ப விளையாட்டு சங்கம் மாநிலசெயலாளர்டாக்டர்விஜூ, உலகசிலம்பம் விளையாட்டு சங்க தலைமைபோட்டி இயக்குநர் ஆசான் பிலால், மாநில செயலாளர் கனகராஜ், உலக சிலம்ப விளையாட்டு சங்க மாவட்ட செயலாளர் சிவக்குமார், மாநில செயலாளர் செல்லாரம் கதிரவன், கர்நாடக மாநில பொதுச்செயலாளர் ரோலன்ட், திண்டுக்கல் மாவட்ட செயலாளர் துரைராஜ், மற்றும் சிலம்ப ஆசான்கள் ஜெமிஷா, நீலகிரி ஆல்பர்ட், செல்வகுமார், நாகராஜ், ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆலங்குளத்தில் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் விழாவில் மத நல்லிணக்க விழா

## புஷ்பாஞ்சலியில் பங்கேற்ற சிறுமிகளுக்கு வரவேற்பு



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவில் திருவிழாவையொட்டி நடைபெற்ற புஷ்பாஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுமிகளுக்கு வரவேற்பு அளிக்கும் வகையில் மத நல்லிணக்க விழா நடைபெற்றது.ஆலங்குளத்தில் ஸ்ரீ பத்ரகாளியம்மன் கோவில் திருவிழா நடைபெற்று வரும் நிலையில், நடைபெற்ற புஷ்பாஞ்சலி நிகழ்ச்சியில்

நூற்றுக்கணக்கான சிறுமிகள் மார்க்கெட் பகுதியில் உள்ள விநாயகர் கோவிலில் இருந்து பூக்களை ஏந்தியவாறு ஊர்வலமாக வந்தனர். அவர்களை வரவேற்கும் விதமாகவும், மத நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையிலும்

தூய பேதுரு ஆலயம் மற்றும் நாடார் சமுதாய முன்னேற்ற சங்கம் சார்பில் சமய நல்லிணக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு ஆலங்குளம் பேரூர்திமுகசெயலாளர் நெல்சன் தலைமை வகித்தார்.

தொழிலதிபர்கள் ஜி.எஸ். செல்வம், தங்க செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர பொருளாளர் சுதந்திரராஜன் வரவேற்றார். மாவட்ட பிரதிநிதி அன்பழகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவபத்மநாதன், பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனர் நம்ம டாக்டர் இம்மானுவேல், ஜமாத் தலைவர் முகமது மைதீன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டுபுஷ்பாஞ்சலியில் பங்கேற்ற சிறுமிகளுக்கு பிஸ்கட், சாக்லேட், தண்ணீர் பாட்டில் மற்றும் குளிர்பானங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கினார்கள்

இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் அரிகிருஷ்ணன், சமூக ஆர்வலர் சோனா மகேஷ்,மாவட்ட பிரதிநிதி நெப்போலியன், பாஜக நிர்வாகி அன்புராஜ், கந்தசாமி, மணி, கிளைச் செயலாளர் சிவசக்தி, வார்டு செயலாளர்கள் அய்யாதுரை, ஜோசப், இசக்கிமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழா முடிவில் வார்டு செயலாளர் அய்யாத்துரை நன்றி கூறினார்

### ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி கடையம் ஊராட்சி ஒன்றியம் வெங்கடாம்பட்டி ஊராட்சி

# காமராஜர் நகர் பகுதியில் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் அவருடைய நிதியிலிருந்து ரூ.16 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது



சாலை அமைக்கப்பட்டுள்ள இடத்தின் அருகே ஓடை செல்கிறது அந்த ஓடை அருகே சிமெண்ட் சாலை அமைப்பதற்கு பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் சாலை அமைக்க தடையில்லா சான்று வழங்கிட பேசி அதனைபெற்றுகொடுத்தேன் சாலைஅமைக்கப்பட இருக்கிற இடத்தின் மத்தியில் நான்கு மின்கம்பங்கள் இருந்தது அந்தமின்கம்பங்களுக்கு ஊராட்சி மன்ற தலைவர் சாருகலாஅவர்களிடம் சொல்லி அந்த மின் கம்பத்தை இடமாற்றம் செய்வதற்கானபணத்தை ஊராட்சி நிதியிலிருந்து கட்ட சொல்லி அந்த பணம் கட்டப்பட்டு அதன் பின்னர் சம்பந்தப்பட்ட மின்சாரத்துறை அதிகாரிகளிடம் பேசி சாலையின் நடுவே இருந்த நான்கு மின்கம்பங்கள் மாற்று இடத்தில் அமைக்கப்பட்டது அந்த சாலை அமைந்திட அடிக்கல்நாட்டுநிகழ்ச்சி நடைபெற்றது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டுஅடிக்கல்நாட்டில் பணியை தொடங்கி வைத்தேன் தற்போது அந்த சாலை அமைக்கப்பட்டு விட்டது சார்பில் இன்று ஒன்றிய செயலாளர் மகேஷ் மாயவன் ஒன்றிய கவுன்சிலர் சங்கர் மாவட்ட பிரதிநிதி ரவி மற்றும் துரை பாண்டியன் ஆகியோர்கள் கிளைக் கழகச் செயலாளர்சுப்ரமணியன்அவர்கள் தலைமையில் ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் தமிழ்செல்வி,பி எல் ஏ டு ஸ்டீபன், ஞானராஜ் அருள்ராஜ், ஞானதுரை, ஜெயக்கனி அருள் ஜோசப்,மார்ட்டின்,உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் வ சாலை போடுவதற்கு பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் பேசி அனுமதியும் மின்கம்பத்தை அகற்றுவதற்கு ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் மின்வாரிய அலுவலர்களிடம் பேசி மின்கம்பத்தை மாற்றுவதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட கழ செயலாளர் சிவ பத்மநாதன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்



# மதுராந்தகம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது ரூ.10 கோடிக்கு மேல் நலத்திட்ட பணிகள் செய்துள்ளேன்

# அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத் பேச்சு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் (தனி ) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத், மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குப்பட்ட விநாயகர்நல்லூர், வேடந்தாங்கல், வளையபுத்தூர், வெள்ளபுத்தூர், சித்தத்தூர், உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு திறந்த வாகனத்தில் சென்று இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அப்பொழுது, அதிமுக வேட்பாளர் கணிதாசம்பத், வாக்காளர்களிடையே பேசும்போது: 2011 முதல் 2016 வரை மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் உறுப்பினராக இருந்தபோது மதுராந்தகம் தாலுகா அலுவலகம், மதுராந்தகம் ஒருங்கிணைந்த நீதிமன்றம், மதுராந்தகம் ஒன்றியத்தில் கத்திரிச்சேரி மேம்பாலம், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் தண்டர்பேட்டை மேம்பாலம், எல். எண்டத்தூர் சுகாதார நிலைய கட்டிடம்,

ஜமீன் எண்டத்தூர் சுகாதார நிலைய கட்டிடத்தில் 30 படுக்கை வசதி கொண்டது மாற்றி அமைத்துள்ளேன். 10 கோடிக்கு மேல் நலத்திட்ட பணிகளை செய்துள்ளேன். இது மட்டுமில்லாமல் அரசின் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தி உள்ளோம். என்று பேசினார்.

இந்த வாக்கு சேகரிப்பின் போது மாநில மகளிர் அணி செயலாளர் வளர்மதி,

மாவட்டச் செயலாளர் திருக்கழுக்குன்றம் ஆறுமுகம், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் தனபால், பாஜக மாவட்ட தலைவர் டாக்டர் பிரவீன்குமார், பாஜக மாவட்ட பொருளாளர் அக்ரோ பாலாஜி, இந்திய ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் சண்முகம் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடன் சென்றனர்.

# ஆலங்குளம் அருகே கிருஷ்ணஜெயந்தி விழாவில் களைகட்டிய உறியடி

## பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனர் டாக்டர் இம்மானுவேல் பங்கேற்பு



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகேயுள்ள புதுப்பட்டியில் யாதவர் சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட பூங்கமுடையார் சாஸ்தா வகையறா ஸ்ரீ கருத்தப்பாண்டி கோவில் வளாகத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெற்றது.

யாதவர் சமுதாயம் மற்றும் கருடா இளைஞர் அணி சார்பில் கோவில் தர்மகர்த்தா சுப்பிரமணியன் தலைமையில் ஸ்ரீ கருத்தப்பாண்டி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணர்ஆகியோர்க்கு படையல் போட்டு நடராஜன் ஐயர் முன்னிலையில் பூஜைகள் நடைபெற்றது

இதையொட்டி நடைபெற்ற சிறப்பு பூஜையில் பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனர் நம்ம டாக்டர் இம்மானுவேல் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுவாமி தரிசனம்செய்தார்.தொடர்ந்து கோவில் வளாகத்தில் நடைபெற்ற உறியடி நிகழ்ச்சியையும், அன்னதானத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் புதுப்பட்டி கூட்டுறவு சங்கத் தலைவர் மாரியப்பன், இ.கருத்தபாண்டி கோனார் முன்னாள் ராணுவவீரர் இ. இசக்கி, அரசு ஒப்பந்ததாரர் ந. முருகன்,மணிகண்டன் பால்பண்ணை ந.வேலு, கதிர் பால்பண்ணை,ந. பரமசிவன், பந்தல் துரை,வேல்சிக்கன் ஸ்டால் மாரியப்பன், அருணா பில்டர்ஸ் மாரியப்பன், சர்வோதயா கண்ணன், நிலக்கிழார்கள் மயில் பட்டு, மயில்கண்ணன், கிட்டாமணி, இசக்கியப்பா, கேபிள் டிவி சுந்தர்ராஜ்,பிஜேபி சுரேஷ், சண்முகா பேங்கர்ஸ் ந.ஆறுமுகம், மாடசாமி, கருடாகிங்ஸ் இளைஞர்கள் கி. இசக்கிஜயப்பன், மு. நம்பிஜயப்பன், சுரேஷ், எஸ். இசக்கிகார்த்திக், கொம்பதாஸ், தாஸ், தனுஷ், பத்மநாதன், பிச்சையா செந்தூர் பைனான்ஸ் ஆகாஷ், கார்த்தி சண்முகசுந்தர், முனைவர் மகேஷ் கிருஷ்ணா, அமமுக நிர்வாகி ஆறுமுகம், முருகன், வேலு, சுப்பிரமணியன், செல்லக்குட்டி, தளவாய், புங்கசாமி, பிரேம், மயில், கண்ணன்,தனுஷ்,வீரவநல்லூர் கண்ணன் மற்றும் கருடா கிங்ஸ் யாதவர் இளைஞர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் உடனிருந்தனர்

# தென்காசி தூய மிக்கேல் அதிதூதர் திருத்தல 364வது ஆண்டு பெருவிழா

## கொடியேற்றத்துடன் துவங்கியது



தென்காசி மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதிருத்தலமாகவும் அனைத்து மதத்தினராலும் சர்வேஸ்வரன் ஆலயம் என அழைக்கப்படும் இவ் ஆலயத்தின் ஆண்டு பெருவிழாவானது செப்டம்பர் 20 ல் தொடங்கி 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம் .அதன்படி இந்த ஆண்டிற்கான புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தின் 364 வது ஆண்டு பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

இந்த கொடியேற்று நிகழ்ச்சியில் அகரக்கட்டு இறைமக்கள் பங்குதந்தை அருட்பணி அலாசியஸ் துரைராஜ் அடிகளார் தலைமையில் ஊர் பொதுமக்கள் ஒன்று கூடி அதிதூதரின் உருவம்பொறித்த திருக்கொடியினைபவனியாககொண்டு வந்து ஆலயத்தின் திருப்பலி பீடத்தில் வைக்கப்பட்டு பின்னர் அருட்தந்தையர் களால் ஜெபம் செய்து மந்திரிக்கப்பட்ட பின்னர் கொடிமரம் கொண்டுவரப் பட்டது.

அதனைத் தொடர்ந்து சென்னை அருட்பணி திசை . ஜெரி அடிகளார் தலைமையிலும் அகர கட்டு பங்குத்தந்தை அருட்பணி.அலாசியஸ் துரைராஜ் அடிகளார், பாளையம் செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி ஜோமிக்ஸ் அடிகளார், சுரண்டை பங்குத் தந்தை ஜோசப் ராஜன், சங்கரன்கோவில்பங்குத்தந்தை அருட்பணி அருள்ராஜ் அடிகளார், அகரக்கட்டு பங்கு உதவிப் பங்குத் தந்தை புஷ்பராஜ் எச்ஜிஎன் ஆகியோர் முன்னிலையிலும் திருக்கொடி ஏற்றப்பட்டது. கொடியேற்ற நாள் சிறப்பு திருப்பலியினை அரக்கட்டு பங்கு தந்தை அருட்பணி.

அலாய்சியஸ் துரைராஜ் அடிகளார் தலைமையேற்று நடத்தினார். இத்திருப்பலியில் பாதுகாப்பும் வழி நடத்துதலும் தரும் புனிதமிக்கேல் என்கின்ற மையச்சிந்தனை யில் சென்னை அருட்பணி திசை ஜெரி அடிகளார் மறைவுரையாற்றினார். இந்த திருப்பலியினையும், கொடியேற்ற நிகழ்வினையும் அகர கட்டு இறை மக்கள் சிறப்பு செய்தனர்.

இந்த நிகழ்ச்சியில் அகரக்கட்டு இறை மக்கள் மற்றும் தென்காசி சுற்றுவட்டார கிளை கிராமங்கள ளான சுந்தரபாண்டியபுரம், செங்கோல் நகர், மத்தளம்பாறை,குத்துக்கல்வலசை, குற்றாலம் குடியிருப்பு சேர்ந்த இறைமக்கள் திரளானோர் பங்கேற்றனர்.நவ நாட்களில் தினமும்காலை6மணிக்கு திருப்பலியும், மாலையில் ஜெபமாலையும் தொடர்ந்துநவநாள் சிறப்பு திருப்பலியும், நற்கருணை ஆசீரும் நடைபெறுகிறது. விழாவின் 8ம் நாள் நிகழ்வாக மாலையில் நற்கருணைப் பெருவிழாவும் நற்கருணை பவனியும் நடைபெற இருக்கிறது. 9ம் நாள் நிகழ்ச்சியாக பாளையங்கோட்டை மறைமாவட்ட மேனாள் ஆயர் மேதகு ஜூடு பால்ராஜ் தலைமையில் நவநாள் சிறப்பு திருப்பலியும் தொடர்ந்து அதிதூதரின் சப்பர பவனியும் நடைபெற உள்ளது. பெருவிழாவின் சிகரமான 10ம் நாள் மதுரை உயர்மறை மாவட்ட பேராயர் அந்தோணி சாமி தலைமையில் ஆடம்பர கூட்டுத் திருப்பலி நடைபெறுகிறது. இந்த திருவிழாவிற்கான ஏற்பாடுகளை பங்குத்தந்தை யும் அதிபருமான ஜேம்ஸ் அடிகளார்,உதவி பங்கு தந்தை அருட்பணி ஜோசப் லாரன்ஸ் HGN அடிகளார் மற்றும் பங்கு பேரவையினர், அமலவை அருட் சகோதரிகள், அன்பிய இறை சமூகத்தினர் செய்து வருகின்றனர்.

# தேனியில் உலக அமைதி தின விழிப்புணர்வு பேரணி எழுச்சியுடன் நடைபெற்றது - ஏடிஎஸ்பி மகேஷ் தொடங்கி வைத்தார்



உலக அமைதியை வலியுறுத்தும் வகையிலும், போரற்ற உலகை உருவாக்கவிழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், தேனியில் உலக அமைதி தின விழிப்புணர்வு பேரணி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. செப்டம்பர் 21 உலக அமைதி தினத்தை முன்னிட்டு, "ஒற்றுமையை வலியுறுத்துவோம்! போரை நிறுத்துவோம்!" என்ற உயரிய நோக்கத்தோடு இந்தவிழிப்புணர்வு ஊர்வலம் ஒருங்கிணைக்கப்பட்டது.

தேனி புதிய பே ருந்து நிலைய வளாகத்தில் பேரணி தொடங்கியது. நிகழ்ச்சிக்கு வருகை தந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ADSP) திரு. மகேஷ் அவர்கள், அமைதிப் பேரணியைக் கொடியசைத்து முறைப்படி தொடங்கி வைத்தார்.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கிய இந்த ஊர்வலம், நகரின் முக்கிய வீதிகள் மற்றும் வணிகப் பகுதிகள் வழியாகப் பயணித்தது. ஊர்வலத்தின் போது, உலக அமைதியின் அவசியத்தையும், மனிதநேயத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தும் விழிப்புணர்வுப் பதாகைகளை (Placards) ஏந்தியவாறு பங்கேற்பாளர்கள் அணிவகுத்துச் சென்றனர். பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடையே அமைதி மற்றும் சகோதரத்துவச் செய்தியைப் பரப்பிய இந்த ஊர்வலம், இறுதியாகத் தேனி பழைய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து நிறைவுற்றது.

வெளிச்சம் அறக்கட்டளை திரு. நாணயம் சிதம்பரம் மற்றும் WPC தலைவர் திரு. P. சர்ச்சில்துரை ஆகியோருடன் இணைந்துஉலகஅமைதி குழு நிர்வாகிகள் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர். மனிதநேய காப்பகம்பால்பாண்டி அவர்கள் இந்நிகழ்வில் சிற ப்புப் பிரமுகர்களாக தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு திரு. V.R. ராஜன், தேனி சோல்ஜர்ஸ் அகாடமி நிறுவனர் திரு. சின்னச்சாமி, இராமானுஜர் அறிவியல் மன்றம் திரு. கரியன், SSA மாவட்ட நிர்வாகிகள் திருமதி. மணிமொழி, திருமதி. மனோரஞ்சிதம், போடி லயன்ஸ் கிளப் Ln. பாண்டியன் மற்றும் கடல்சார் பொறியாளர் Er. சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், தேனி வைகை அ ரிமா சங்கம், தேனி ராயல் அரிமா சங்கம், தேனி முல்லை அரிமா சங்கம், தேனி ரோட்டரி சங்கம், மக்கள் மன்றங்களின் கூட்டமைப்பு, வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, தேனி சோல்ஜர்ஸ் அகாடமி, தேனி மாவட்ட ஆட்டோ ஒட்டுநர்கள் சங்கம், தேனி மாவட்ட பத்திரிகையாளர்கள் சங்கங்கள் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பேரணியில் பங்கேற்ற அ னைவருக்கும் அமைதிச் செய்தி அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

# தூத்துக்குடியில் 70க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு கடலில் கரைப்பு



தபசு மண்டபம் பகுதியில் இருந்து 70-க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள், இந்து முன்னணி மாநகரச் செயலாளர் ராகவேந்திரன் தலைமையில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. பலத்த போலீஸ் பாதுகாப்புடன் நகரின் முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற ஊர்வலம், திரேஸ்புரம் சங்கு முக விநாயகர் கடற்கரைப் பகுதிக்கு சென்றடைந்தது.

விநாயகர் ஊர்வலத்தின்போது, இளைஞர்கள் ஆட்டம், பாட்டம் என உற்சாகமாக நடனமாடியபடி விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இதனால் நகரின் முக்கிய வீ தி க ளி ல் விழாக்கோலம் காணப்பட்டது.

இதனிடையே, திரேஸ்புரம் சங்கு முக விநாயகர் கடற்கரைப் பகுதியில் விநாயகர் சிலைகளை கடலில் கரைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளர் மற்றும் முனியசாமி கோவில் தர்மகர்த்தாவான எஸ்.ஆர். சந்தனராஜ், தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத் தலைவர் இசக்கிமுத்து ஆகியோர் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

தொடர்ந்து, சங்கு முக விநாயகர் கடற்கரைப் பகுதியில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர் 70-க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் கடலில் கரைக்கப்பட்டன.

விநாயகர் சிலைகள் கரைப்பு நிகழ்வை முன்னிட்டு, போலீசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

நி க ழ் ச் சி யி ல் தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரிலிங்கம், செயலாளர் முருகையா, ஆலோசகர் மகாராஜா, அகமது, முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச் செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து மற்றும் கோவில் நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி, காந்திஜி சாலை வசந்தம் கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 30% தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனையை கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி (20.09.2026) அன்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் D.சண்முகன், வசந்தம் கோஆப்டெக்ஸ் கோவை மண்டல முதுநிலை மேலாளர் அம்சவேணி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று நேற்று (21.09.2026) குறைகள் கேட்டறிந்தார்.



ஈரோடு மாநகராட்சி, காந்திஜி சாலை வசந்தம் கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 30% தீபாவளி சிறப்புத் தள்ளுபடி முதல் விற்பனையை கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி (20.09.2026) அன்று துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் D.சண்முகன், வசந்தம் கோஆப்டெக்ஸ் கோவை மண்டல முதுநிலை மேலாளர் அம்சவேணி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி, காந்திஜி சாலை வசந்தம் கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் 30% தீபாவளி சிறப்புத் தள்ளுபடி விற்பனையை கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி (20.09.2026) அன்று துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் D.சண்முகன், வசந்தம் கோஆப்டெக்ஸ் கோவை மண்டல முதுநிலை மேலாளர் அம்சவேணி உட்பட பலர் உள்ளனர்.

# ஆசிய விளையாட்டில் மேலும் ஒரு பதக்கம்... துப்பாக்கி சுடுதலில் இந்திய வீரர்கள் அசத்தல்



ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் ஒரு பதக்கம் கிடைத்துள்ளது.

ஜப்பானில் நடைபெற்று வரும் 20-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய வீரர், வீராங்கனைகள் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர். 45 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றுள்ள இந்தப் போட்டிகள் அக்டோபர் 4-ந்தேதி வரை

இந்த நிலையில், துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் ஒரு பதக்கம் கிடைத்து ள்ளது. ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் பார்த்த் ராகேஷ் மானே, ருத்ராக்ஸ் பாட்டீல் மற்றும் ஹிமான்ஷு தில்லான் ஆகியோர் அடங்கிய இந்திய அணி மொத்தம் 1890.1 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தைப் பிடித்து வெள்ளிபதக்கத்தை வென்றுள்ளது.

இதில் சீனா 1899.9 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தையும் கொரிய அணி மூன்றாவது இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

வெள்ளிப் பதக்கம்

இதன் மூலம் ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது. நேற்று பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் அணிகள் பிரிவில் இளவேனில் வாலறிவன், சோனம் மாஸ்கர், விதர்ஷா வினோத் ஆகியோர் அடங்கிய இந்திய அணி வெள்ளிப் பதக்கம் வென்றது. அதேபோல் தனிநபர் பிரிவிலும் இளவேனில் வாலறிவன் வெள்ளி வென்றார்.

துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய வீரர்கள் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

# Delhi court revives complaint against Sonia Gandhi over alleged voter list forgery



A Delhi court has set aside a magistrate's order refusing to probe allegations against senior Congress leader Sonia Gandhi over her inclusion in electoral rolls, in a case dating to a period three years before she acquired Indian citizenship.

Special Judge Vishal Gogne of the Rouse Avenue Court, while orally reading the operative portion of the order, said the magistrate's decision passed in September last year was at variance with the allegations made by the petitioner regarding the alleged forgery.

The court also termed the magistrate's order "non-speaking" with regard to the facts of the case. The court has remanded the matter back to the magistrate for an appropriate inquiry and hearing the matter afresh by a special court on September 29. The court said that the magistrate order branded complaint as lacking particulars and that it suffers from "manifest error of law". This comes after a Delhi court junked a complaint on September 10 questioning Sonia Gandhi's alleged inclusion in the electoral roll in 1980, before she became an Indian citizen in 1983, holding that the accusations lacked substance and abused the process of law.

Additional Chief Metropolitan Magistrate Vaibhav Chaurasia had passed a brief four-page order to the effect on September 10, after extensively hearing the complainant, Vikas Pathak's arguments over two hearings.

While dismissing the complaint, the court pointed to the lack of any cogent evidence against the Congress leader, which could prove she forged papers to enroll herself as a voter, while maintaining the issue itself went beyond the court's jurisdiction.

Judge Gogne said the magistrate had passed a "perverse and improper" order without giving the investigating officer of the Delhi Police sufficient time to respond to the allegations and submit a status report.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.